முருகப்பெருமான் துணை

**மகான் குரு பகவான் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.04.2023**, சனிக்கிழமை

1. சடாட்சர பலமான அரங்கனே
சரவணச் சுடரேற்றி அருளி
இடர்வெல்லும் ஞான தேசிகனே
இனிதே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தகர் திங்கள்
குறைவிலா நவதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 09 ம் நாள், 22.04.2023 சனிக்கிழமை)
தெரிவிப்பேன் குருபகவான் யானும்
தேசிகனுக்கு அனுகூல ஆசி
3. ஆசிதனை உலகோர் நலம்பெற
அகிலம் பாதுகாப்புற உரைப்பேன்
ஆசிதந்து சூட்சும குருவாக
அனைவருக்கும் எவ்வித பேதமுமின்றி
4. பேதமுமின்றி ஞானம் அருளும்
பிரணவக்குடிலை நாடி வந்து
ஆதரவாக அறச் சேவையில்
அனைவரும் தன் உழைப்பை தந்து
5. தந்துமே தன் பலமாக அரங்கன்
தருகின்ற தீட்சைகள் தன்னை
சிந்தைவைத்து ஏற்று நன்கு
செபதபமாக வாழ்வில் தொடர
6. தொடரவே குருவருள் பலத்தின்
திடமும் துணையும் அடைந்து
இடர்களை களையும் பலமும்
இனிபிறவி ஏன்என்ற உணர்வும்
7. உணர்வுடன் பிறவி அறுக்கும்
உயர்வழியும் குருவருளால்
தானாக ஞானமாக உள்ளேறி
தவதரும அணிகலன்களை மாட்டி

8. மாட்டியே தொடர்ந்து வந்து
மனமாயைகள்தனை வென்று
வாட்டம் கட்டம் துக்கமில்லா
வாய்மை காத்து தருமநெறி

9. நெறிகுன்றா வாழ்வாக மாற்றி
நிலவுலகில் குருவருளாலே
அறியாமை விலகி ஞான ஒளி
அகத்துள் காண்பர் சரவண சோதியாக

10. ஆகவே இவ்வித அற்புதம்
அகிலம் எங்குமே பெருகிட
மகான்களாக மக்கள்தேறி
மண்ணுலகம் நல்லத் தலைமை

11. தலைமை ஆறுமுகன் ஆசிபட
தரணியில் அமைந்து பாதுகாப்பு
வளமிக்க ஞானபூமியாகவும் மாறும்
வழங்கிய அனுகூல ஆசி முற்றே

—சுபம்—